**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**STC.No.564/2023**

Deposition of **PW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | பால்ராஜ் | **Age** | : | 76/2026 |
| **Father's Name** | : | கணபதி | **Religion** | : | இந்து |
| **Village** | : | ரெங்கநாதபுரம் | **Calling** | : | ஓய்வு |
| **Taluk** | : | போடிநாயக்கனூர் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **27/03/2026.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

2) நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ள விபரங்கள் தான் சொன்னவை தான் என்றால், சரிதான். எனக்கும் எதிரிக்கும் என்ன வியாபார தொடர்பு என்று நான் எனது நிரூபண வாக்குமூலத்திலும் வழக்கறிஞர் அறிவிப்புலும் சொல்லவில்லை என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திலும் வழக்கறிஞர் அறிவிப்பிலும் எந்த தேதியில் எதிரி என்னிடம் பணம் கேட்டார் என்ற விபரத்தை நான் சொல்லவில்லை என்றால், சரிதான். எதிரிக்கும் எனக்கும் எத்தனை வருடங்களாக பழக்கம்? என்றால் சுமார் 10 வருடங்களாக பழக்கம்.

3) நானும் எதிரியும் இறுதியாக பேசிக்கொண்டு எவ்வளவு வருடங்கள் ஆகிறது? என்றால், 2022 ஆம் ஆண்டிற்கு பிறகு பேசிக் கொள்ளவில்லை. எதிரி எங்கு வைத்து காசோலை கொடுத்தார் யார் முன்னிலையில் கொடுத்தார் என்ற விபரத்தை நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில்

சொல்லவில்லை என்றால், சரிதான். எதிரி என்னிடம் டிசம்பர் மாதம் 3வது வாரம் வாக்கில் பணம் கேட்டதாக சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். எந்த தேதியில் என குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால், சரிதான். எதிரிக்கு பணத்தை ரொக்கமாக கொடுத்தேனா? அல்லது வங்கி மூலமாக கொடுத்தேனா? என்ற விபரத்தை நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிலும் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால், ரொக்கமாகத்தான் கொடுத்தேன்.

4) எதிரி, நான் பணம் கொடுத்த போது என்னிடம் காசோலை கொடுத்ததாகவும், நான் சொல்லவில்லை என்றும், எந்த தேதியில் காசோலையை கொடுத்தார் என்ற விபரத்தையும் நான் வழக்கறிஞர் அறிவிப்பிலும், நிரூபண வாக்குமூலத்திலும், சொல்லவில்லை என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் காலத்தை அனுமானமாக சொல்லி உள்ளேன் என்றால், சரியல்ல. எதிரிக்கு உண்மையில் பணம் கொடுத்திருந்தால் தேதி, நாள் விபரம் குறிப்பிட்டுச் சொல்லி இருப்பேன் என்றும், பணம் கொடுக்கவில்லை என்பதால் தான் என்னால் தேதி, நாள் விபரம் குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை என்று சொன்னால், சரியல்ல.

5) காசோலையை வசூலுக்கு செலுத்தி பணம் இன்றி திரும்பிய பிறகு நான் எதிரியிடம் பேசியதாக வழக்கு ஆவணங்களில் சொல்லவில்லை என்றால், சரிதான். காசோலையில் உள்ள கையொப்பம் மற்றும் தொகை கருப்பு மையில் எழுதப்பட்டுள்ளது என்றும், மற்ற விபரங்கள் புளூ மையில் எழுதப்பட்டுள்ளது என்றும் சொன்னால், அவர் எழுதிக் கொண்டு வந்தார். காசோலையில் எனது பெயர் கேப்பிட்டல் லெட்டரில் எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். மற்ற விவரங்கள் ஸ்மால் லெட்டரில் எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். அவர் அவ்வாறு தான் எழுதிக் கொண்டு வந்தார் என்றால், சரிதான்.

6) நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லும் பணம் எனக்கு எவ்வாறு கிடைத்தது? என்றால், வியாபாரம் செய்து வைத்திருந்த பணம். மேலும் கண் ஆப்ரேஷன் செய்வதற்காக சேர்த்து வைத்திருந்த பணம். நான் ஏலக்காய் வியாபாரம் செய்து வருகிறேனா? என்றால், நான் புரோக்கராக இருந்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள காசோலை வழக்கிற்க்கான பணம் நான் ஏலக்காய் வாங்கிக் கொடுத்ததற்காகவா? இல்லை நான் பணம் கொடுத்ததற்காகவா? என்றால், பணம் கொடுத்ததற்கு. நான் ஏலக்காய் கமிஷன் வியாபாரம் செய்து வருவதாக எனது வழக்கு ஆவணங்களில் நான் சொல்லவில்லை என்றால், சரிதான். நான் ஏலக்காய் சுத்தம் செய்யும் தொழில் செய்தேனா? என்றால், இல்லை.

7) எதிரி எனது வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பி உள்ளாரா? என்றால், அனுப்பி உள்ளார். ஒருமுறை 2 லட்சமும், இரண்டு முறை 1 லட்சம் பணம் அனுப்பி உள்ளார். இந்த விபரங்களை நான் வழக்கு ஆவணங்களில் சொல்லியுள்ளேனா? என்றால், அது வியாபாரத்திற்காக நான் கடன் கொடுப்பதற்கு முன்பாக அவர் எனக்கு கொடுத்த பணம். இந்த வழக்கு நான் தாக்கல் செய்த பிறகு எதிரி எனக்கு எனது வங்கி கணக்கின் மூலமாக பணம் அனுப்பி உள்ளார் என்று சொன்னால், இல்லை. எதிரி எனக்கு தரவேண்டிய அசல் தொகையையும் வட்டி தொகையையும் முழுமையாக செலுத்தி விட்டார் என்றால், சரியல்ல.

8) 25/08/2022 ஆம் தேதி எனது தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி கணக்கிற்கு எதிரி ரூபாய் 1 லட்சம் பணம் அனுப்பியுள்ளார் என்றால், அது அதற்கு முந்தைய வரவு செலவுக்கானது. 12/09/2022 ஆம் தேதி 2 லட்சம் பணம் எனக்கு வங்கிக் கணக்கில் அனுப்பி உள்ளார் என்றால், அது அதற்கு முந்தைய வரவு செலவுக்கானது.16/09/2022ம் தேதி ரூ.1,25,000/- எனது வங்கி கணக்கிற்கு அனுப்பி உள்ளார் என்றால், அது இந்த வழக்கில் உள்ள காசோலைக்கு முந்தைய வரவு செலவு. 21/9/2022-ம் தேதி ரூபாய் 1 லட்சம்

பணம் எனது வங்கிக் கணக்கிற்கு அனுப்பி உள்ளார் என்றால், அதுவும் இந்த காசோலைக்கு முந்தைய வரவு செலவு. 12/10/2022-ம் தேதி எனது வங்கி கணக்கிற்கு ரூபாய் 1 லட்சம் அனுப்பியுள்ளார் என்றால், அனுப்பி இருக்கலாம். அது முந்தைய வரவு, செலவிற்கானது.

9) எதிரிக்கு நான் புரோக்கராக இருந்து ஏலக்காய் வாங்கி கொடுத்த வகையில் அவர் செலுத்த வேண்டிய தொகையை முழுவதுமாக செலுத்தி விட்டார் என்றும், அவர் கொடுத்து வைத்திருந்த காசோலையை வெவ்வேறு பேனா மையினால் நிரப்பி நான் வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. காசோலை பணம் இல்லை என்று திரும்பிய பிறகு உரிய காலகட்டத்திற்குள் நான் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால், சரியல்ல. நான் காலகெடு தாண்டி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எதிரி 06/03/2022-ம் தேதி பணம் ஏற்கனவே கொடுத்த விபரத்தையும் சொல்லி பதில் அறிவிப்பு அனுப்பி இருந்தார் என்றால், சரியல்ல. நான் நீதிமன்றத்தில் உண்மை அல்லாத விபரங்களை கூறி மாற்றுமுறை ஆவண சட்டத்தில் உள்ள முறைகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.03.27 16:00:06 +0530

**Judicial Magistrate,**

**Bodinayakanur.**